**செய்தி வெளியீடு எண்: 712** **நாள்: 05.10.2018**

**செய்தி வெளியீடு**

மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரம் அளித்தல் அமைச்சகத்தின், மாற்றுத்திறனாளிகளுக்கான அதிகாரமளித்தல் துறை– புதுடெல்லி, அறிவித்துள்ள புதிய திட்டமான ”நாட்டிலுள்ள ஐந்து மண்டலங்களில் ஒவ்வொரு மண்டலத்திலும் செவித்திறன் குறையுடையோர்க்கான கல்லூரி ஒன்றிற்கு நிதியுதவி அளித்தல்” என்ற திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் பல்கலைகழக மான்ய குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகங்களின் ஒரு கல்லூரிக்கு கீழ்கண்டவற்றிற்கு நிதியுதவி வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது, அவையாவன (1) கல்லூரியின் அடிப்படை வசதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்படுத்துவதற்கு, (2) உதவி உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், கணினி, அறைகலன், மேஜை, நாற்காலி, தளவாட பொருட்கள், சேர்மானங்கள் மற்றும் பொருத்துகலன்கள் (3) கல்லூரி ஆசிரியர்கள், பணியாளர்கள், சைகை மொழிபெயர்ப்பாளர்கள் ஆகியோருக்கான சம்பளங்களுக்காகவும் படிகளுக்காகவும் செலவு செய்த தொகையை மான்ய தொகையாக திருப்பி கொடுத்தல் (4) கட்டடம் கட்ட நிதியுதவி.

இந்த திட்டத்தைப்பற்றிய விரிவான விளக்கம்/வழிகாட்டுதல்கள்/நிபந்தனைகள் ஆகியவை **“www.disabilityaffairs.gov.in”** என்ற இணையதளத்தில் தரப்பட்டுள்ளன.

தகுதியுள்ள மற்றும் விருப்பமுள்ள பல்கலைகழகம்/கல்லூரிகள் தங்களுடைய விண்ணப்பங்களை மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம், லேடி வெலிங்டன் கல்லூரி வளாகம், காமராஜர் சாலை, சென்னை–600005 என்ற முகவரிக்கு 15.10.2018க்குள் விண்ணப்பிக்கும்படி கோரப்படுகிறது. இக்கருத்துருக்கள் மாநில அரசின் பரிந்துரையுடன் மத்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**